**கவனிக்க**.- 2016.06.10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1972 - 2016 ජූනි මස 17 වැනි සිකුරාදා - 2016.06.17

*1972 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 840 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 852 |


**கவனிக்க**.- இலங்கை தேசிய ஆராய்ச்சி பேரவை சட்டமூலம் 2016, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, யூலை மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, யூன் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியங்களில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.*

*2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.*

*3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.*

*5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.*

*6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.*

*7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, யூலை மாதம் 18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.*

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, மே 30.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி* |
| --- | --- | --- | --- |
| கண்டி | உடுநுவர | எல்பிட்டிய மற்றும் கெலிஓயா பிரதேசத்தின் உடுநுவர மற்றும் யட்டிநுவர பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

6-447

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, யூலை மாதம் 18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, மே 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | ஜா-எல | ராகம வைத்தியசாலைப் பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கம்பஹா |

6-448

## இலங்கை புகையிரத திணைக்களத்தின் நீதி உத்தியோகத்தர் தரம் III இற்கான வெற்றிடத்தை நிரப்புதல்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் நீதி உத்தியோகத்தர் (தரம் III) பதவியில் உள்ள வெற்றிடம் ஒன்று (01) இனை நிரப்புவதற்காக சிறந்த ஒழுக்கமுடைய இலங்கைப் பிரசை களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பதவியின் பொதுவான வேலை விபரம்**.- திணைக்களத் தலைவரினால் கொடுக்கப்படும் வழக்குகள் தொடர்பாகவும் அத்துடன் உப திணைக்களங்கள் மற்றும் அதன்கீழ் உள்ள அலுவலகங்களில் உத்தியோகத்தர்களின் வழக்குகளில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு சட்ட விதிமுறைகளை அறிவுறுத்துதல், நீதித் திணைக்களம் மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகள், வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் பங்கேற்றல், மனித உரிமைகள் தொடர்பான முறையீடுகளில் பங்கேற்றல், திணைக்களம் மற்றும் திணைக்கள விடய சம்பந்தக்காரர்களும் அரசாங்க திணைக்களங்களின் சுற்றறிக்கைகளை, ஒழுக்கவிதி முறைகளை சட்ட விதிமுறைகளுக்கமைய எழுத்து மூல ஆவணங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அத்திணைக் களங்களின் சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுரை பெற்றுக்கொடுத்தல் போன்ற அலுவல்களே வழங்கப்படும்.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையில் உள்ள நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் நீதி உத்தியோகத்தர் பதவியில் சேர்த்துக்கொள்ளப்படும் விதிமுறைகளுக்கமையவும் மற்றும் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளும் மாற்றங்களுக்கும் திணைக்களத்தின் சட்ட திட்டங்களுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அரச சேவை தொடர்பாக விதிக்கப்படும் அனைத்து சட்டங்கள், ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் நடவடிக்கை முறைகளுக்கு அமைவாக நீங்கள் கடமைகளையும் பொறுப்புக்களையும் பணிகளையும் நிறைவேற்ற வேண்டும். அதே போன்று நீங்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரச நிதி ஒழுங்குவிதிகள், அரசின் வேறு ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் என்பவற்றிற்கும் அவற்றிற்கு உரியதாக இடையிடையே வெளியிடப்படும் திருத்தங்களுக்கு இசைய நடக்க வேண்டும். அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் நீதி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

3.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும். மேலும், நீங்கள் விதவைகள்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டம், தபுதாரர்/ அநாதைகள் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

3.2 இப்பதவி 3 வருட தகுதிகாண் நிலைக் காலத்திற்கு உட்பட்டது. இப்பதவி பெற்ற மூன்று வருடங்களுக்குள் முதலாம் தடைதாண்டல் பரீட்சையில் II ஆம் தரத்திற்கு உயர்வடைந்து, மூன்று வருடங்களின் பின்னர் இரண்டாம் தடைதாண்டல் பரீட்சையில் I ஆம் தரத்திற்கு உயர்வடைந்து ஐந்து வருடங்களின் பின்னர் மூன்றாம் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெற வேண்டும்.

3.3 இந்நியமனம் ஏற்கப்பட்ட திகதி தொடக்கம் ஐந்து (5) வருடங்கள் கடந்து செல்ல முன், பொது நிருவாக சுற்றுநிருபம் 01/ 2014 இற்கு அமைவாக இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியை அடைந்துள்ளதாக நீங்கள் நிருபிக்க வேண்டும். இந்நியமனத்திற்கான தகைமையை வேறு மொழியில் பூர்த்தி செய்திருப்பின் தங்களின் தற்றுணிபின்படி அரச கரும மொழி ஒன்றில் தேர்ச்சிபெற வேண்டும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்ற இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 06/ 2006 இன்படி SL-1-2006 சம்பள திட்டத்திற்கமைவான சம்பள அளவுத்திட்டத்தின்கீழ் காட்டப்பட்டுள்ளது. ரூ. 22,935 - 10 X 645 - 8 X 790 - 17 X 1,050 - ரூபா 53,555.

6. **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சட்டம் தொடர்பான பட்டத்தினைப் பெற்றிருத்தல் அல்லது இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப் பிரமாணம் பெற்றிருத்தலும் இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம் பெற்ற பின்னர் 3 வருட காலத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தலும் வேண்டும். மேலும் க. பொ. த. (சா.த.) இல் அல்லது க. பொ. த. (உ. த.) இல் ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

7. **சேவையில் நியமிக்கும் முறை**.- மேற்குறிப்பிட்ட 6 ஆவது பந்தியின் அடிப்படையில் தகுதி பெற்றிருக்கும் விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்று நியமிக்கப்படும் நேர்முகப் பரீட் சைக் குழுவினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் பின்வரும் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்ப தாரிகள் வெற்றிடத்தின் அடிப்படையில் நியமிக்கப்படுவர். மேலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதியைப் பெற்றுத்தரும் பின்வரும் புள்ளிகள் விதிமுறைக்கு அமைவாக நேர்முகப் பரீட்சையில் நடைமுறைப்படுத்தப்படும்.

| நேர்முகப் பரீட்சையில் புள்ளிகளைப் பெற்றுத்தரும் ஆவணங்கள் | உயர்ந்தபட்சப் புள்ளிகள் |
|---|---|
| * மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| * மேலதிக தொழில் தகைமைகள் | 15 |
| * மேலதிக அனுபவம் (தொழில் தகைமையின்கீழ் வழக் கறிஞராக குறைந்தது 3 வருட சேவைக்காலத்திற்குப் பின்னர் (ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள் வழங்கப்படும்). | 30 |

| *நேர்முகப் பரீட்சையில் புள்ளிகளைப் பெற்றுத்தரும் ஆவணங்கள்* | *உயர்ந்தபட்சப் புள்ளிகள்* |
|---|---|
| * கணினித் தகைமை, தொடர்பாடல் தொழில்நுட்பத் தகைமை பற்றிய அறிவு | 15 |
| * ஆங்கில மொழித் தேர்ச்சி | 15 |
| * நேர்முகப் பரீட்சையை எதிர் கொள்ளும் திறன் | 05 |

8. **விண்ணப்பிக்கும் முறை**.- அனைத்து விபரங்களும் உள்ளடங்கலான உங்களால் வடிவமைக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரம், பிறப்புச் சான்றிதழ் பிரதி, தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி, கல்விச் சான்றிதழ்கள், தொழிற்சான்றிதழ்கள் மற்றும் தொழில் அனுபவ சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகளுடன் 2016, யூலை 12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பாக கிடைக்கப்பெறும் வகையில் "புகையிரத பொது முகாமையாளர், இலங்கை புகையிரத திணைக்களம், த. பெ. இல. 355, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை புகையிரத திணைக்களத்தில் நீதி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" என்று தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

* தற்பொழுது அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் விண்ணப்பதாரர்கள் தங்கள் திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியின்படி,

செயலாளர்,
போக்குவரத்து மற்றும் சிவில்
விமான சேவைகள் அமைச்சு.

போக்குவரத்து மற்றும் சிவில்
விமான சேவைகள் அமைச்சு,
7 ஆவது மாடி,
"செத்சிறிபாய",
2 ஆம் கட்டம்,
பத்தரமுல்லை.

6-501

---

## வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு

### நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் செயற்படும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஆட்சேர்த்துக்கொள்வதற்கான பொதுவான தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும்-

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;
(ஆ) பதவியில் ஒப்படைக்கப்படுகின்ற பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தேர்ச்சியினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;
(இ) சிறந்த நன்னடத்தையினை உடையவராக இருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் (பொறியியல்)** - வெற்றிடம் 1

**கல்வித் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சிவில் பொறியியல் விடயம் தொடர்பான முதுமானிப் பட்டத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(ஆ) பட்டயம்பெற்ற பொறியியல் நிறுவனம் ஒன்றுசார்ந்த அங்கத்துவத்தினைப் பெற்றிருத்தல் ;

அத்துடன்

(இ) பட்டம் பெற்றதன் பின்னர் அரசாங்க அல்லது அரசாங்க நிர்வாகத்திலுள்ள நிறுவனம் ஒன்றிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிலோ முகாமைத்துவ மட்டத்திலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 10 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.

**வயது**.- 35 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 55 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும் ;

**சம்பள அளவுத்திட்டம்**.- HM 1-1- 2006, ரூபா 38,530 - 15 x 1,100 - ரூபா 55,030.

**கொடுப்பனவுகள்**.- அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்.

**பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் தகவல் முகாமைத்துவ தொகுதி)** - வெற்றிடம் 1

**கல்வித் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம்,

புள்ளிவிபரவியல், கணினி விஞ்ஞான பாடங்கள் உட்பட்டதான பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(ஆ) பட்டத்தினைப் பெற்றதன் பின்னர் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிர்வாகத்திலுள்ள நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ மட்ட பதவியொன்றில் ஆகக்குறைந்தது 15 வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

**வயது**.- 35 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 55 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும் ;

**சம்பள அளவுத்திட்டம்**.- HM 1-1-2006, ரூபா 38,530 - 15 x 1,100 - ரூபா 55,030.

**கொடுப்பனவுகள்**.- அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்.

**உதவிப் பணிப்பாளர் (பொறியியல்)** - வெற்றிடம் 1

**கல்வித் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சிவில் பொறியியல் தொடர்பான பட்டம் ;

மற்றும்/ அல்லது

(ஆ) பட்டத்தினைப் பெற்றதன் பின்னர்/தொழில் நிறுவனம் ஒன்றில் அங்கத்துவத்தினைப் பெற்றதன் பின்னர் அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிர்வாகத்திலுள்ள நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் பொறியியல் துறையில் ஆகக்குறைந்தது 3 வருட சேவை அனுபவத்தினைக் கொண்டிருத்தல்.

**வயது**.- 25 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 45 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும் ;

**சம்பள அளவுத்திட்டம்**.- MM - 1 - 1-2006, 25,640 - 3 x 665 - 7 x 735 - 15 x 925 - ரூபா 46,655.

**கொடுப்பனவுகள்**.- அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்.

**நிர்வாக உத்தியோகத்தர்** - வெற்றிடம் 1

**கல்வித் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து எந்தவொரு பாடத்துறையிலாவது பெற்றுக்கொண்ட பட்டம் ஒன்று ;

அத்துடன்

(ஆ) அரசாங்கத்தின் அல்லது அரசாங்க நிர்வாகத்திலுள்ள நிறுவனம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் மனிதவள முகாமைத்துவம் தொடர்பில் ஆகக்குறைந்தது 1 வருடத்திற்கான அனுபவம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

**வயது**.- 25 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 45 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**.- JM 1-1-2006A, ரூபா 20,525 - 10 x 365 - 18 x 550 - ரூபா 34,075.

**கொடுப்பனவுகள்**.- அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்.

**தொகுதிப் பகுப்பாய்வாளர்** - வெற்றிடம் 1

**கல்வித் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து கணினி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பம்/ கணினி மற்றும் முகாமைத்துவம், நகர மற்றும் கிராமிய திட்டமிடல் பாடங்கள் உள்ளடங்கலாக பெற்றுக்கொண்ட பட்டம்.

**வயது**.- 22 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 35 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**.- MA 5-1-2006A, ரூபா 16,890 - 10 x 320 - 15 x 365 - 11 x 450 - ரூபா 30,515.

**கொடுப்பனவுகள்**.- அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்.

**தரவு திட்டமிடல் உதவியாளர்** - வெற்றிடம் 1

**கல்வித் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து கணினி விஞ்ஞானம்/ புள்ளி விபரவியல்/ தகவல் தொழில்நுட்பம்/ கணினி மற்றும் முகாமைத்துவம், நகர மற்றும் கிராமிய திட்டமிடல் பாடங்கள் உள்ளடங்கலாக பெற்றுக்கொண்ட பட்டம்.

**வயது**.- 25 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 35 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**.- MA 5-1-2006A, ரூபா 16,890 - 10 x 320 - 15 x 365 - 11 x 450 - ரூபா 30,515.

**கொடுப்பனவுகள்**.- அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்.

**சமுதாய அபிவிருத்தி உதவியாளர்** - வெற்றிடம் 3

**கல்வித் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து எந்தவொரு பாடத்துறையிலாவது பெற்றுக்கொண்ட பட்டம் ஒன்று.

**பிற தகைமைகள்**.- தொழில்சார் சமூகப்பணி தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறி அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து விவசாயம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ்/ சமூக விஞ்ஞான விடயம் தொடர்பில் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**வயது**.- 22 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 35 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**.- MA 3-2006A, ரூபா 15,600 - 10 x 215 - 4 x 240 - 15 x 320 - 7 x 360 - ரூபா 26,030.

**கொடுப்பனவுகள்**.- அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்.

**சட்ட உதவியாளர்** - வெற்றிடம் 1

**கல்வித் தகைமைகள் :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சட்ட பாடம் உள்ளடங்கலாக பெற்றுக்கொண்ட பட்டம் ஒன்று.

**வயது**.- 22 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 35 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**.- MA 3 - 2006A, ரூபா 15,600 - 10 x 215 - 4 x 240 - 15 x 320 - 7 x 360 - ரூபா 26,030.

**கொடுப்பனவுகள்**.- அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்.

**தொழில்நுட்ப உதவியாளர்** - வெற்றிடம் 1

**கல்வித் தகைமைகள் :**

(அ) மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் தேறியிருத்தல் ;

மற்றும்

தொழில்சார் திறமைகள் :

(ஆ) மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரகாரம் தேசிய தொழில்சார் திறமை/ NVQ 5 ஆவது மட்டத்திற்கு குறையாத தரத்தில் இருக்கின்ற-

(i) தொழில்நுட்ப, தேசிய டிப்ளோமா சான்றிதழ் (சிவில் பொறியியல்) ; அல்லது

(ii) உயர் தேசிய டிப்ளோமா (பொறியியல்) சான்றிதழைப் பெற்றிருத்தல் ; அல்லது

(iii) தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (பொறியியல்/ அளவை மதிப்பீடு) அல்லது அதற்கு இணையான அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து சிவில் பொறியியல் சான்றிதழ்/ அளவை மதிப்பீடு சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**வயது**.- 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 35 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும் ;

**சம்பள அளவுத்திட்டம்**.- MA 2, 1 - 2006A, ரூபா 14,610 - 10 x 145 - 7 x 170 - 4 x 240 - 20 x 320 - ரூபா 24,610.

**கொடுப்பனவுகள்**.- அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்.

**சமூக அபிவிருத்தி உதவியாளர்** - வெற்றிடம் 1

**கல்வித் தகைமைகள் :**

(அ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் பழைய பாடத்திட்டத்திற்கமைய (4) பாடங்களில் அல்லது புதிய பாடத்திட்டத்திற்கமைய 3 பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் தேறியிருத்தல் ;

மற்றும்

(இ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் வழங்கப்படுகின்ற தொழில்சார் சமூகப்பணி தொடர்பான முழுநேர இரு வருட டிப்ளோமா பாடநெறியில் தேறியிருத்தல்.

**வயது**.- 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 30 வருடங்களுக்கு மேற்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்**.- MA 1 - 1 - 2006A, 13,450 - 10 x 145 - 7 x 170 - 4 x 240 - 20 x 320 - ரூபா 23,450.

**கொடுப்பனவுகள்**.- அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க சபைகளில் தற்போது சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்களைத் தனது குறித்த நிறுவனங்களின் பிரதானிகள் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் முழுமையான சுயவிபரத் தரவுகள் உள்ளடங்கியதாக தனது கையெழுத்தினால் தயாரிக்கப் பட்ட விண்ணப்பப்படிவத்தினை கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு 2016.06.17 ஆந் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**குறிப்பு**.- இங்கு உள்ளடங்கியுள்ள சம்பள விபரங்கள் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 02/ 2016 இற்கு ஏற்ப திருத்தங்களுக்கு உள்ளாகலாம்.

பணிப்பாளர் நாயகம்,
நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை.

நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை,
9 ஆம் மாடி,
'செத்சிறிபாய',
பத்தரமுல்லை.
தொலைபேசி இல. : 011-2871305.
தொலைநகல் இல. 011-2884131.
மின்-அஞ்சல் : admnusda@gmail.com

6-625

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

நீதி அமைச்சு

### சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின் உதவிச் செயலாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016

சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின் 2 உதவிச் செயலாளர் பதவிகளுக்காக தகுதியானவர்களைத் தெரிவுசெய்துகொள்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயார்செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் நாளன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின் உதவிச் செயலாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2016.07.18 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட ஆவணமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதம் செய்வதனால் ஏற்படுகின்ற நட்டங்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர்.

நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின்படி தீர்மானிக்கப்படுகின்றது.

*2. **சேவை நிபந்தனைகள்** :*

(i) *இப்பதவி நிரந்தரமானது ;*

(ii) *இப்பதவியில் நியமனம் பெறுகின்ற அலுவலர்கள் மூன்று (3) வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுவதுடன் அம்மூன்று (03) வருட காலத்திற்குள் முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.*

(iii) *பொது நிருவாகச் சுற்றறிக்கை 1/ 2014 மற்றும் அதற்கு நேரொத்த சுற்றறிக்கைகளின்படி மொழி பற்றிய தேர்ச்சி மட்டத்தை 5 வருட காலத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் சேர்ந்த அலுவலர்கள் 3 வருட காலத்துக்குள் அரச கரும மொழியொன்றின் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் மற்றைய அரச கரும மொழி பற்றிய தேர்ச்சியை 5 வருட காலத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

(iv) *அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், திணைக்கள ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்படுகிறது.*

*3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு 3/ 2006 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி எஸ்எல்-1-2016, ரூபா 47,615-10 X 1,335 - 8 X 1,630 - 17 X 2,170-ரூ. 1,10,895 மாதாந்த சம்பள அளவுத் திட்டமொன்று உரித்தாகிறது. (2016.02.25 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 03/ 2016 இன் ஏற்பாடுகளுக்கமைவாக அதன் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளம் உரித்தாகிறது.)*

*4. **தகைமைகள்** :*

(i) ***கல்வித் தகைமைகள்** .- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக இருத்தல்.*

*கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா. த.) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.*

(ii) ***தொழில் தகைமைகள்**.- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் 3 வருட காலத்துக்குக் குறையாத உயிர்ப்பான அனுபவத்தைப் பெற்றிருத்தல்.*

*5. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)*

*6. **உடற் தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியில் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.*

*7. **பிற தகைமைகள்** :*

(i) *விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;*

(ii) *விண்ணப்பதாரர்கள் சிறந்த நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும் ;*

(iii) *நன்றாக ஆங்கில மொழியைக் கற்றிருக்க வேண்டும் ;*

(iv) *பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவைப்படுகின்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்ய வேண்டுமென விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்படுகின்ற இறுதித் திகதிக்கு அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.*

*8. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**.- அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படுவதுடன் அப்பரீட்சையின் போதே தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும்.*

9. **நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் முறை :**

| தொடர் இல. | புள்ளிகள் வழங்கப்படவேண்டிய துறைகள் | புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | **பொதுச் சட்டக் கோட்பாடுகள் :** | | |
| | (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படுகின்ற சட்டம் பற்றிய பட்டத்தில்- | | |
| | முதலாம் வகுப்புச் சித்திக்காக | 25 | |
| | இரண்டாம் வகுப்பின் உயர் சித்திக்காக | 20 | 25 |
| | இரண்டாம் வகுப்பின்கீழ் சித்திக்காக | 15 | |
| | (ii) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சை முதலாம் வகுப்புச் சித்திக்காக | 20 | |
| | (iii) இலங்கை சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சை இரண்டாம் வகுப்புச் சித்திக்காக (புள்ளிகள் பெற்றுக்கொடுக்கப்படுவது பட்டம் அல்லது சட்டக் கல்லூரியின் இறுதி ஆண்டின் பரீட்சை ஆகிய இரண்டில் பெறப் பட்ட உயரிய தகைமைக்கு மாத்திரமே.) | 15 | |
| 2. | **மொழித் தேர்ச்சி :** | | |
| | (i) பட்டம் பட்டப்பின் படிப்பு, சட்டமானி கற்கைநெறி, சட்டப்பின் கற்கைநெறி, ஆங்கில மொழி மூலத்தில் கற்றிருத்தல் (சம்பந்தப் பட்ட பரீட்சை வினாத்தாள்கள் அனைத்துக்கும் ஆங்கில மொழி மூலத்தில் விடையளித்திருக்க வேண்டும்.) | 10 | |
| | (ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெறப்பட்ட ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா (கற்கைநெறியின் காலப்பகுதி 6 மாதங்களுக் குக் குறையாத/ 720 மணித்தியாலங்கள்) | 05 | 10 |
| | (iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெறப்பட்ட ஆங்கில மொழி பற்றிய தராதரப்பத்திர கற்கைநெறி (கற்கைநெறியின் காலப்பகுதி 3 மாதங்களுக்குக் குறையாத/ 360 மணித்தியாலங்கள் பட்டப்பின் சட்ட டிப்ளோமா) | 03 | |
| 3. | **மேலதிக தொழில் தகைமைகள் :** | | |
| | (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியினால் வழங்கப்படுகின்ற சட்டத்துறையின் பட்டப்பின் படிப்பு (LLM) | 30 | |
| | (ii) கற்கைநெறியின் காலப்பகுதி ஓராண்டுக்குக் குறையாத சட்டத் துறையின் பட்டப்பின் சட்ட டிப்ளோமா (ஒரு டிப்ளோமாவுக்கு 5 புள்ளிகள் வீதம்) | 20 | 30 |

| தொடர் இல. | புள்ளிகள் வழங்கப்படவேண்டிய துறைகள் | புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| | (iii) கற்கைநெறியின் காலப்பகுதி 6 மாதங்களுக்குக் குறையாத பட்டப் பின் சட்ட டிப்ளோமா (ஒரு டிப்ளோமாவுக்கு 3 புள்ளிகள் வீதம்) | 10 | |
| 4. | **தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு :**<br><br>(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல் தொழில் நுட்பப் பாடம் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம்<br><br>(ii) 6 மாதங்களுக்கு/ 720 மணித்தியாலங்களுக்குக் குறையாத கற்கை நெறிக் காலத்தை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா<br><br>(iii) 3 மாதங்களுக்குக் குறையாத கற்கைநெறிக் காலத்தைக் கொண்ட தகவல் தொழில்நுட்பம் பற்றிய தராதரப்பத்திர கற்கைநெறி | 15<br><br>10<br><br>05 | 15 |
| 5. | **மேலதிக அனுபவம் :**<br><br>(i) அரசாங்க சேவையில் அல்லது தனியார் துறையில் சட்டத்தரணி ஒருவராக பெற்றிருக்கும் அனுபவம் (விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைகளாகிய 3 வருட சேவை அனுபவத்திற்கு மேலதிகமாக சட்டத்தரணியாகப் பெற்றுள்ள அனுபவம் கவனத்திற் கொள்ளப்படுகிறது.) (ஓராண்டுக்கு 03 புள்ளிகள் வீதம் உச்சப் புள்ளிகள் 15 ஆகும்.)<br><br>(நீதிபதி ஒருவரிடமிருந்து அல்லது சனாதிபதி சட்டத்தரணி ஒரு வரிடமிருந்து அல்லது 20 வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள சட்டத்தரணி ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழொன்றின் மூலம் அனுபவத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.) | ஆண்டொன் றுக்கு 03 புள்ளிகள் வீதம் | 15 |
| 6. | நேர்முகப் பரீட்சையில் காட்டப்படுகின்ற திறமை | 05 | 05 |
| | மொத்தம் | | 100 |

10. (i) விண்ணப்பம் 22 x 29 செ. மீ. அளவிலான A4 தாளில் தயார்செய்ய வேண்டுமென்பதுடன் 1 தொடக்கம் 14 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 15 தொடக்கம் முடிவடையும் வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்குகின்றவாறு தயார் செய்ய வேண்டும். அதற்கான தகவல்களை தனது கையெழுத்தினாலேயே தெளிவாக உள்ளடக்க வேண்டும். சகல விதத்திலும் சரியாகப் பூர்த்தியாகாத அடிப்படைத் தகைமைகள் இல்லாத உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கமைவாக இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும். மேலும் பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக உள்ளதா என விண்ணப்பதாரர் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுமெனவும் மேலும் அறிவித்துக்கொள்கிறேன். விண்ணப்பங்களை இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயார் செய்யவும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

**கவனிக்க :**

(அ) விண்ணப்பத்துடன் எந்தவோர் ஆவணமும் அல்லது அதன் பிரதியொன்று இணைத்தலாகாது.

(ஆ) வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ii) அரசாங்க சேவையின்/ மாகாண அரசாங்க சேவையின்/ அரசாங்க கூட்டுத்தாபனங்களில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத்/ நிறுவனத் தலைவரினூடாக அனுப்ப வேண்டும்.

11. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகள் காலத்துக்குக்காலம் அரசாங்க சேவை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நீதி அமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்திற்கான சேவைப்பிரமாணம் மற்றும் அதற்குச் செய்யப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப்பதவிக்காக ஏற்புடையதாகிறது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
2016, யூன் 02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தின் உதவிச் செயலாளர் பதவி**

இல. ............................................
(அலுவலக உபயோகத்துக்காக)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

4. தொலைபேசி இல. :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | |

6. பால் : ஆண்/ பெண் :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

9. தேசிய இனம் :----.

10. விவாகமானவரா/ விவாகமாகாதவரா என்பது :----.

11. சட்டப் பட்டம் பற்றிய விபரம் :----.

பல்கலைக்கழகம் :----.
பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.
மொழிமூலம் :----.

12. சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்த திகதி :----.

13. சட்டத்தரணியாகத் தொழில் அனுபவம் :----. வருடங்கள் :----.

14. க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :
சுட்டெண் :----. பரீட்சையில் தோற்றிய ஆண்டு :----.
சிங்களம்/ தமிழ் பாடத்துக்கான சித்தி :----.
ஆங்கில மொழிக்கான சித்தி :----.

15. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 9 ஆம் பந்தியின்படி தகைமைகள் :

(i) :----.
(ii) :----.
(iii) :----.
(iv) :----.
(v) :----.
(vi) :----.

16. மொழித் தேர்ச்சி (சம்பந்தப்பட்ட கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக.)

| | மிகவும் நன்று | நன்று | சாதாரணம் | மிகக் குறைவு |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

.................................................... ஆகிய நான், இதில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை என்றும், உண்மையானவை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டோ, வினைத் திறமையின்மையின் காரணமாக சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்பட்டோ இல்லை எனவும், பதவியை கைவிட்டுச் சென்ற ஒருவராகக் கருதப்படவில்லை எனவும் அத்தாட்சிப்படுத்துறேன். இதில் அடங்கியுள்ள தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்றும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரியவருமிடத்து நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்காக திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................................................................... மத்திய அரசாங்கத்தின் கீழான ...................................................................... மாகாண சபையின் கீழான அமைச்சு/ திணைக்களத்தில்/ ........................... ஆக நிரந்தர/ தற்காலிக/ அமய அலுவலர் ஒருவராக சேவை செய்கின்றார் என்றும், வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
அமைச்சு செயலாளரின்/ திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
அலுவலக முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/ திணைக்களம் :----.
திகதி :----.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

### இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் III இல் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015

இலங்கை விஞ்ஞான சேவையில் தரம் III இற்கு உரித்தாகும் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகைமையுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆணைப்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினைக் கீழ்க்குறிப்பிடப்படும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை" என்னும் முகவரியினை அடையக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும். "இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" என்னும் சொற்கள் விண்ணப்பம் இணைக்கப்பட்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும். மேலும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்பத்திரங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் இடுதல் வேண்டும்.

| *தொடர் இல.* | *வெற்றிடமாகவுள்ள பதவிக்குரிய திணைக்களம்/ அமைச்சு* | *பதவிப்பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *குறியீட்டு இலக்கம்* |
|---|---|---|---|---|
| 1 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 14 | 101 |
| | | உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 09 | 102 |
| 2 | வளிமண்டலவியல் திணைக்களம் | வளிமண்டலவியலாளர் | 01 | 201 |
| 3 | விஞ்ஞானம், தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 01 | 301 |
| 4 | தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 11 | 401 |
| 5 | சுகாதார சேவைகள் திணைக்களம் | பௌதீகவியலாளர் | 15 | 501 |

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.07.15 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்பத்திரம் ஒன்றினை அல்லது அது தொடர்பான கடிதமொன்றினை தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமாதல் தொடர்பாக விடுக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பம் செய்தலினை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் இழப்புக்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

* மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றிற்கும் மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும்போது விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்புதல் கூடாது. அத்துடன், இவ்வறிவித்தலில் தரப்பட்டவாறு முன்னுரிமை ஒழுங்கில் விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கும் பதவி சுட்டிக்காட்டப்படல் வேண்டும். பரீட்சார்த்தி

ஒருவரினால் விண்ணப்பிக்கக்கூடிய ஆகக்கூடிய பதவிகளின் எண்ணிக்கை 5 ஆகும். அத்துடன், அவ்வெண்ணிக்கைக்கு அதிகமாக விண்ணப்பிக்கும் பதவிகள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. மேலும், பரீட்சார்த்தியின் முன்னுரிமை வெளிப்படுத்தப்பட்டவுடன் அதன் பின்னர் பதவிகளின் முன்னுரிமை ஒழுங்கினை மாற்றுவதற்கு அவர் அனுமதிக்கப்பட மாட்டார்.

**உதாரணம்.-** முதலாவது தெரிவாக விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவி, இரண்டாவது தெரிவாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவி மற்றும் மூன்றாவது தெரிவாக வளிமண்டலவியல் திணைக்களத்தில் வளிமண்டலவியலாளர் பதவி என்ற பதவி வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்க விரும்பும் பரீட்சார்த்தி ஒருவர் அப்பதவிகளுக்கு உரித்துடைய குறியீட்டு இலக்கம் விண்ணப்பப்படிவத்தில் 2 ஆவது அட்டவணை "குறியீட்டு இலக்கம்" என்னும் நிரலில் உரிய குறியீட்டு இலக்கங்களைக் குறிப்பிட வேண்டும்.

| தொடர் இலக்கம் | முன்னுரிமைத் தெரிவு | திணைக்களம் | பதவி | குறியீட்டு இலக்கம் | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 ஆம் தெரிவு | விஞ்ஞானம், தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 3 | 0 | 1 |
| 2 | 2 ஆம் தெரிவு | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 1 | 0 | 1 |
| 3 | 3 ஆம் தெரிவு | வளிமண்டலவியல் திணைக்களம் | வளிமண்டலவியலாளர் | 2 | 0 | 1 |
| 4 | 4 ஆம் தெரிவு | | | | | |
| 5 | 5 ஆம் தெரிவு | | | | | |

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமை.-** எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதோடு தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக பொதுவான நேர்முகப் பரீட்சையொன்றும் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் பெற்றுள்ள பரீட்சைப் பெறுபேறுகளின் ஒழுங்கில் மற்றும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கான தெரிவின் முன்னுரிமையினை கவனத்திற்கொண்டு வெற்றிடப் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலாக்கத் திகதி என்பன வரையறுக்கப்படும்.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். உமக்கு உரித்துடைய ஓய்வூதிய முறைமை தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிதல் வேண்டும் ;

(ii) தகுதிகாண் காலம் (3) வருடங்களாக இருக்கும். அத்துடன் குறித்துரைக்கப்பட்ட (3) வருடங்களினுள் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையினை சித்தியெய்தல் வேண்டும் ;

(iii) நியமனத் திகதியிலிருந்து (5) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் 2014.01.21 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் தொடர்ந்து வந்த சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைவாக இரண்டாம் மொழியில் தேர்ச்சியினை அடைந்துகொள்ளல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழி மூலம் ஒன்றினால் சேவைக்கு இணைக்கப்பட்ட அலுவலர்களாயின் தகுதிகாண் காலத்தினுள் ஓர் அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதோடு, மற்றைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினை (5) வருடங்களினுள் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ;

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கு, 1877/27 ஆம் இலக்கத்தினைக் கொண்ட 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இந்நியமனம் உட்பட்டது.

*3.* ***சம்பள அளவுத்திட்டம்.***- இப்பதவிக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இன் அட்டவணை I இற்கு ஏற்ப சம்பள சுற்றறிக்கைக்கு SL-1-2016, ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 இனை (மாதாந்த) சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடையதாகும்.

**4. கல்வித் தகைமைகள் :**

| தொடர் இல. | திணைக்களம் | தொழில் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| 1 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | (i) உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து, விவசாயம் அல்லது தாவரவியல் அல்லது இரசாயனவியல் அல்லது உயிரியல் அல்லது மானுடவியல் போன்ற பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் வகுப்புடன் கூடிய விசேட பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;<br><br>அல்லது<br><br>(ஆ) விவசாயம் அல்லது தாவரவியல் அல்லது இரசாயனவியல் அல்லது உயிரியல் அல்லது பௌதீகவியல் அல்லது மானுடவியல் போன்ற பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் வகுப்புடன் கூடிய சாதாரண பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;<br><br>அல்லது<br><br>(இ) பீ.எஸ்சி. சாதாரண பட்டத்துடன் விவசாயம் அல்லது தாவரவியல் அல்லது இரசாயனவியல் அல்லது உயிரியல் அல்லது மானுடவியல் போன்ற பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு உரிய பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல். |
| | | (ii) உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து, விவசாயம் அல்லது தாவரவியல் அல்லது இரசாயனவியல் அல்லது உயிரியல் அல்லது மானுடவியல் போன்ற பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் வகுப்புடன் கூடிய விசேட பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;<br><br>அல்லது |

| தொடர் இல. | திணைக்களம் | தொழில் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| | | | (ஆ) விவசாயம் அல்லது தாவரவியல் அல்லது இரசாயனவியல் அல்லது உயிரியல் அல்லது மானுடவியல் போன்ற பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்தில் வகுப்புடன் கூடிய சாதாரண பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;<br><br>அல்லது<br><br>(இ) பீ.எஸ்சி. சாதாரண பட்டத்துடன் விவசாயம் அல்லது தாவரவியல் அல்லது இரசாயனவியல் அல்லது உயிரியல் அல்லது மானுடவியல் போன்ற பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்திற்கு உரிய பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல். |
| 2 | வளிமண்டலவியல் திணைக்களம் | (i) வளிமண்டலவியலாளர் | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதீகவியல் அல்லது கணிதத்தில் வகுப்புடன் கூடிய பீ.எஸ்.சி. விசேட பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;<br><br>அல்லது<br><br>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதீகவியல் மற்றும் கணிதத்தில் குறைந்தது 2 ஆம் வகுப்பு (மேல்) ஒன்றுடன் கூடிய பீ.எஸ்.சி. பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;<br><br>அல்லது<br><br>(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதீகவியல் மற்றும்/அல்லது கணிதத்தில் குறைந்தது 2 ஆம் வகுப்பு (மேல்) ஒன்றுடன் கூடிய பீ.எஸ்.சி. பட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வளிமண்டலவியல் தொடர்பான பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல்.<br><br>**குறிப்பு**.- மேற்கூறப்பட்ட விசேட பட்டம் கணித பாடம் தொடர்பாக இருந்தால் பௌதீகவியல் பாடத்தில் சாதாரண இயற்பியல் பரிசோதனை அல்லது அதனைவிட உயர் தரத்தினையுடைய பரிசோதனையொன்றினில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். |

| *தொடர் இல.* | *திணைக்களம்* | *தொழில்* | *கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்* |
|---|---|---|---|
| *3* | விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | (i) உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து -<br>(அ) இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் போன்ற பாடங்களில் வகுப்புடன் கூடிய பீ.எஸ்.சி. விசேட பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>(ஆ) இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் போன்ற பாடங்களில் வகுப்புடன் கூடிய பீ.எஸ்.சி. சாதாரண பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>(இ) இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் போன்ற பாடங்களில் பீ.எஸ்சி. சாதாரண பட்டத்துடன் அப்பாடங்களின் ஒன்றில் பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல். |
| *4* | தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் | (i) உதவிப் பணிப்பாளர் | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து, நான்கு வருடங்கள் தாவரவியல் அல்லது விவசாயம் தொடர்பாக முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புடன் கூடிய விசேட பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தாவரவியல் அல்லது விவசாயம் தொடர்பாக விசேட சாதாரண சித்தியுடன் கூடிய பட்டமொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சூழலியல், காட்டியல், தாவர வகைப்பட்டியல், உயிரியல் பல்வகைத் தன்மை மற்றும் பாதுகாப்பு அல்லது பூங்காவியல் அல்லது நில அலங்காரம் பற்றிய ஆய்வறிக்கையுடன் குறைந்தளவு இரு வருடங்களையுடைய பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;<br>அல்லது |

| தொடர் இல. | திணைக்களம் | தொழில் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| | | | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சாதாரண உயிரியல் அல்லது விவசாய பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து சூழலியல், காட்டியல், தாவர வகைப்பட்டியல், உயிரியல் பல்வகைத் தன்மை மற்றும் பாதுகாப்பு அல்லது பூங்காவியல் அல்லது நில அலங்காரம் பற்றிய ஆய்வறிக்கையுடன் குறைந்தளவு இரு வருடங்களையுடைய பட்டப்பின் பட்டத்தினைப் பெற்றிருத்தல். |
| 5 | சுகாதார சேவைத் திணைக்களம் | (i) பௌதீகவியலாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதீகவியல் பாடத்தில் (விசேட) கௌரவ பட்டத்தினைப் பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>(ஆ) பௌதீகவியல் விசேட பட்டம் அல்லது பௌதீகவியல் பட்டத்துடன் பீ.எஸ்சி. பட்டத்தினை மற்றும் கதிர்வீச்சுக் கலைஞராக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஐந்து வருட சேவையினைக் கொண்ட அலுவலராக இருத்தல். |

5. **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 22 வயதிற்குக் குறையாமல் இருப்பதோடு 32 வயதினைவிட மேற்பட்டிருத்தல் கூடாது.

6. **உடலியல் தகைமைகள்.**- எல்லாப் பரீட்சார்த்திகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமாக இருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;
(ii) சிறந்த ஒழுக்க நடத்தையினைக் கொண்டிருத்தல் வேண்டும் ;
(iii) ஏதேனும் சமயப் பிரிவில் பதவியில் அமர்த்தப்பட்ட ஒருவராக இருத்தல் கூடாது ;
(iv) இரு தடவைக்கு மேல் இலங்கை விஞ்ஞான சேவையின் திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் கூடாது ;
(v) இவ்வர்த்தமானியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியில் சகல வழிகளிலும் விண்ணப்பதாரி இப்பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8. 8.1 எழுத்துமூலப் பரீட்சை :

8.1.1 இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் ;

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| 1. விவேகப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொது வினாப்பத்திரம் | 3 மணித்தியாலம் | 100 | 40 |

8.1.2 பாடத்திட்டம் :

| வினாத்தாள் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. விவேகப் பரீட்சை | பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான சிந்தனை, பொது விவேகம் மற்றும் தீர்மானங்கள் எடுக்கும் திறன் போன்ற விடயங்களைக் கண்டறிவதற்காக தயாரிக்கப்பட்ட இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு வினாக்கள் 50 இனைக் கொண்டுள்ளது. |
| 2. பொது வினாப்பத்திரம் | இலங்கையின் அரசியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதார சூழல் தொடர்புபட்ட விடயங்கள், தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் முக்கியமான விடயங்கள் தொடர்பிலான பொது அறிவு மற்றும் தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பிலான அறிவு என்பவற்றைப் பரீட்சிப்பதற்கான ஒரு வினாப்பத்திரம். இவ்வினாப்பத்திரமானது இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். முதலாவது பகுதியானது சுருக்க விடைகளுக்கான வினாக்களைக் கொண்டிருக்கும். இதற்காக 25 புள்ளிகள் வழங்கப்படும். இரண்டாவது பகுதியானது பகுதியளவு கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். 8 வினாக்களில் 5 இற்கு விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்டுக்கொள்ளப்படுவர். ஒதுக்கப்படும் புள்ளிகளின் எண்ணிக்கை 75 ஆகும். |

*8.2 நியமன முறைமை.*- ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% அல்லது அதற்கு மேலதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகள் புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப ஆட்சேர்ப்பு நடைபெறும். ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% இனை அல்லது அதற்கு மேலதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, விண்ணப்பதாரிகளின் தகைமைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் பரீட்சித்துப் பார்க்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்படுவதில்லை.

9. **பரீட்சை நிபந்தனைகள்** :

(i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்தி தான் விரும்பிய ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு ஆரம்பத்தில் குறிப்பிட்ட பரீட்சை மொழி மூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. சகல பரீட்சார்த்திகளும் வினாப்பத்திரங்கள் அனைத்திற்கும் தோற்றுதல் வேண்டும் ;

(ii) பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்படும் பொருட்டு நாட்டில் எந்தவொரு தபாலகத்திலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். மேலும், பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை பரீட்சார்த்தி தம்வசம் வைத்திருத்தல் உசிதமானதாகும்.

(iii) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் எச்சூழ்நிலையிலும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

(iv) இப்பரீட்சை ஒற்றோபர் மாதம் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறியத்தரப்படும்.

(v) பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு.**- அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்தினுள் உள்நுழைவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கப்படும் திகதியில் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது தனது கையொப்பத்தினைச் சான்றுபடுத்திய அனுமதிப்பத்திரத்தினை மாத்திரமேயாகும்.

பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என அங்கீகாரமாகக் கொள்ளப்பட முடியாது.

(vi) விண்ணப்பப்படிவம் செ. மீ. 21 – 29.7 அளவிலான ஏ4 தாளில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதோடு, தலைப்பு இலக்கம் 1 இலிருந்து 3.8 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 3.8 இலிருந்தான தலைப்புக்கள் அடுத்த பக்கங்களிலும் தோன்றும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதோடு, அதற்கு உரித்தான தகவல்களை தனது கையெழுத்தினால் தெளிவாக எழுதுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் சகல அம்சங்களும் முழுமையில்லாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை பரீட்சார்த்தி தன்வசம் வைத்திருத்தல் உசிதமானது. மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்ததாக உள்ளதா என விண்ணப்பதாரியினால் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும் என்பதோடு, அவ்வாறில்லாதுவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதனை மேலும் அறியத்தருகின்றேன். விண்ணப்பப்படிவத்தினை இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக தயாரிக்கவும்.

**குறிப்பு**.– உங்களது வசதிக்காக ஒழுங்காக தயாரிக்கப்பட்ட பரீட்சை விண்ணப்பப்படிவம் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.pubad.gov.lk) பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

(vii) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக அறியத்தரப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சைக்காக விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டவுடன் பத்திரிகைகளில் அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 தினங்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதுவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு ஏற்ப இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடத்தில் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் நிழற்பிரதியையும், பதிவுசெய்த பற்றுச்சீட்டினையும், கொழும்புக்கு வெளியே இருக்கும் பட்சத்தில் அனுமதிப்பத்திரத்தினை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கமொன்றினைக் குறிப்பிட்டு உமது கோரிக்கைக் கடிதமொன்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தலானது மிகவும் பயனுள்ளதாகும்.

(viii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் பரீட்சையினை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச்செய்வதற்கோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

(ix) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்தி உட்பட்டுள்ளார். அவ்விதிகளை மீறும் சந்தர்ப்பத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்படுவார்கள்.

(x) பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.– பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தங்களது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக, பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

கவனிக்க வேண்டியவை :

(அ) விண்ணப்பத்துடன் எந்தவொரு ஆவணத்தினையோ அல்லது அதன் நிழற்பிரதியையோ இணைத்தல் கூடாது ;
(ஆ) கோரப்படும் சந்தர்ப்பங்களில் ஆவணங்களினைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் தொடர்பாக கவனத்திற்கொள்ளப்படுவதில்லை.

அரச சேவையில்/ மாகாண அரச சேவையில்/ அரச கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் அலுவலர்களினால் தங்களது திணைக்கள/ நிறுவனத் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் சகல பரீட்சார்த்திகளும் தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளல் அவசியமாகும். நிறுவனத்தினால் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி அவரின் கையொப்பத்தினைத் தான் சேவையாற்றும் நிறுவனத் தலைவரினால் சான்றுப்படுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தங்களது கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலை அதிபர்/ ஓய்வுபெற்ற

*அலுவலர்/பிரிவின் கிராம அலுவலர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலர் அல்லது 2,40,360 ரூபாவிற்கும் கூடுதலான வருடாந்த திரட்டிய சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளும் அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ள பதவிநிலை அலுவலர் ஒருவரினால் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாரை அதிபதி அல்லது பௌத்த துறவியொருவர் அல்லது ஏனைய வழிபாட்டுத்தளத்தின் பொறுப்பதிகாரி, மத குருவாகக் கருதப்படும் ஒருவர் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

ஜே. தடல்லகே,
செயலாளர்,
*பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.*

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

ශ්‍රී ලංකා විද්‍යාත්මක සේවයේ III ශ්‍රේණියට බඳවාගැනීම සඳහා වන විවෘත තරග විභාගය (2015)
*இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் III இல் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - (2015)*
Open Competitive Examination for Recruitment to Class III of Sri Lanka Scientific Service (2015)

(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)

*1. மொழி மூலம் (பரீட்சையின் மொழி மூலம்) :*

*சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4*

*(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)*

* *பரீட்சையின் மொழி மூலத்திலே விண்ணப்பம் நிரப்பப்பட வேண்டும்.*

*2. விண்ணப்பிக்கும் பதவி/ பதவிகள் :*

| தொடர் இலக்கம் | முன்னுரிமைத் தெரிவு | திணைக்களம் | பதவி | குறியீட்டு இலக்கம் | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 ஆம் தெரிவு | | | | | |
| 2 | 2 ஆம் தெரிவு | | | | | |
| 3 | 3 ஆம் தெரிவு | | | | | |
| 4 | 4 ஆம் தெரிவு | | | | | |
| 5 | 5 ஆம் தெரிவு | | | | | |

*3. தனிப்பட்ட தகவல்கள் :*

*3.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.*
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

*3.2 முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :*
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

*3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.*

3.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(இம்முகவரிக்கு அனுமதி அட்டை அஞ்சலிடப்படும்)

3.5 தபால் நகரம் :----.

3.6 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3.7 தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

3.8 பால் : ☐
ஆண்-0, பெண்-1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

3.9 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.10 விண்ணப்ப முடிவுத் திகதியிலுள்ளவாறு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.11 சாகியம் : ☐
சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, ஏனையோர்-5
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

3.12 குடிசார் நிலை : ☐

திருமணமானவர்-1, திருமணமாகாதவர்-2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

3.13 தொலைபேசி இலக்கம் :

கையடக்கத் தொலைபேசி : ☐☐☐☐☐☐☐☐☐☐

வதிவிடம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

3.14 மின்னஞ்சல் முகவரி :----.

4. தகைமைகள் :

4.1 பட்டம் பெற்ற திகதி :----.
(தாங்கள் இத்தகைமைகளைக் கொண்டுள்ளீர்களா என்பதைச் சரிபார்ப்பதற்கு இவ்வறிவித்தலின் பிரிவு 11(iv) இனைத் தயவுசெய்து கவனமாகப் பார்க்கவும்) :

| பரீட்சை/ பட்டம் | வகுப்பு | வருடம் | பாடங்கள் | பல்கலைக்கழகம்/ நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |

5. பற்றுச்சீட்டினை இங்கு பாதுகாப்பாக ஒட்டவும் :

| பரீட்சார்த்தி நிழற்படப் பிரதி ஒன்றை வைத்திருத்தல் உசிதமானதாக இருக்கும். |
|---|

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
கட்டணம் செலுத்தப்பட்டுள்ள அஞ்சல் அலுவலகம் :----.
திகதி :----.

6. தாங்கள் நீதிமன்றில் ஏதேனும் குற்றவியல் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் குற்றம் மற்றும் விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும் :----.

7. பரீட்சார்த்தியின் பிரகடனம் :

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை இப்படிவத்தில் தரப்பட்ட தகவல்கள் உண்மையானது என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய .................... ஆந் திகதிய ........................ ஆம் இலக்க பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளேன் என்றும் நான் வெளிப்படுத்துகின்றேன். பரீட்சையினை நிர்வகிக்கும் விதிகள் மற்றும் நான் இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க தகுதியற்றவரெனத் தெரியவரின் பரீட்சைக்கு முன்னரோ, அதன்போதோ அல்லது அதன் பின்னரோ எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச்செய்வதற்காக எடுக்கப்படக்கூடிய ஏதேனும் தீர்மானம் ஆகியவற்றின் மூலம் கட்டுப்படவும் நான் உடன்படுகின்றேன். மேலும், இவ்வறிவித்தலிலுள்ள ஏதேனும் விபரம் பிழையானது அல்லது சரியற்றது எனத் தெரியவரின் எதுவித இழப்பீடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு நான் ஆளாவேன். மேலும், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் குறித்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மூலம் கட்டுப்படவும் நான் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தலின் 13(ஈ) இற்கிணங்க) :

இவ்விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் ..................................... (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளார் என்றும் நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். .................... ஆந் திகதி என் முன்னிலையில் அவர் தனது கையொப்பத்தினை இட்டுள்ளார்.

----,
கையொப்பத்தினை உறுதிப்படுத்தும் அலுவரின் கையொப்பம்.

கையொப்பத்தினை உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடுவதன் மூலம் சான்றுப்படுத்துவதற்கு)
திகதி :----.

9. நிறுவனத் தலைவரின் உறுதியுரை :

(அரச சேவை/ மாகாண அரச சேவை/ அரச கூட்டுத்தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்).

இவ்விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .......................................... (முழுப்பெயர்) இவ்வமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ............................................... ஆக சேவையாற்றி வருவதுடன் அவரின் விண்ணப்பம் பரிந்துரைக்கப்பட்டு இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படின் இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து அவரை விடுவிப்பதற்கு அவசியமான ஒழுங்குகளை மேற்கொள்ள முடியும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை) :

6-585

## கல்வி அமைச்சு

பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) மற்றும் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதல் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களை பல்கலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்ளல் - 2015/ 2016 கற்கை ஆண்டு

2015/ 2016 ஆம் கல்வியாண்டில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளைத் தொடர்வதற்கு இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பதற்காக பொதுக் கல்வித் தகைமை (வெளிவாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) மற்றும் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்துள்ள அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைப்பட்டப் பாடநெறி ;

(ii) விஞ்ஞானமானிப் பட்டப் பாடநெறி.

2. **விண்ணப்பதாரிகள் இதற்காகப் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :**

(i) 2011 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் நடாத்தப்பட்ட பொதுக் கலைத் தகைமை (வெளி வாரி) பரீட்சை (ஆங்கிலப் பாடத்துடன்) அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) முதற்பட்டப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். (பரீட்சைப் பெறுபேற்றுப் பிரதியொன்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.) ;

(ii) விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று ஆசிரியராக 5 வருட சேவையைப் பூர்த்திசெய்திருக்க வேண்டியதுடன் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டதாக இருக்க வேண்டும் ;

(iii) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கல்வியியல் கல்லூரி, பல்கலைக்கழகம் என்பவற்றிலோ தேசிய கல்வி நிறுவகத்திலோ பாடநெறிகளைத் தொடர்வதற்காகப் பதிவுசெய்யாதவராக இருத்தலாகாது ;

(iv) இவ்விசேட அனுமதியின்கீழ் மாணவர்கள் தேர்ந் தெடுக்கப்படுவது பொதுக் கலைத் தகைமை (வெளிவாரி) பரீட்சையில் (ஆங்கிலப் பாடத்துடன்) அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகள் மற்றும் உரிய பாடங்களுக்கு பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலாகும். இதற்கு மேலதிகமாக உரிய பல்கலைக்கழகத்தின் தீர்மானத்திற்கு ஏற்ப விஞ்ஞானப் பட்டப் பாடநெறியை தொடர்வதற்கான தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் அப்பல் கலைக்கழகத்தினால் வாய்மூலப் பரீட்சைக்கும் உட்படுத்தப்படுவதுடன் கலைப்பட்டப் பாட நெறியை தொடர்வதற்கான தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் நேர்முகப் பரீட்சைக்கும் உட்படுத்தப்படுவார்கள் ;

(v) இப்பாடநெறியைத் தொடர்வதற்கு தெரிவு செய்யப் படுவார்களாயின் அவர்களுக்கு கற்கை விடுமுறை வழங்கப்பட வேண்டியபடியால் கற்கை விடுமுறை உரிமை கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும்.

3. சம்பளத்துடனான விடுமுறை பெற்றுக்கொள்வதற்குள்ள உரிமைகள் பற்றி நேர்முகப் பரீட்சையின்போது வினவப்படும்.

4. பட்டம் பெற்றுக்கொண்ட பின்பு பட்டதாரி ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான பொறுப்பை இவ்வமைச்சு ஏற்றுக்கொள்ளாது.

5. அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் சேவை செய்யும் ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களில் அப்பாடசாலையின் அதிபர்/ முகாமையாளரால் உரிய ஆசியருக்காக கற்கை விடுமுறை அனுமதிக்கப்பட முடியும்/ முடியாது என்பது தொடர்பாக விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

6. அரசாங்க ஆசியர்களின் விண்ணப்பங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர்களினாலும், அரசாங்க அனுமதிபெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் உரிய அதிபர்/ முகாமையாளர் ஆகியோராலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

6. சகல விண்ணப்பப்பத்திரங்களும் இங்கு கீழே குறிப்பிடப் படுகின்ற மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரித்து இரண்டு (2) பிரதிகளாக "செயலாளர், கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு 2016.07.15 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2015/ 2016 (ஆசிரியர்களுக்காக) இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

டபிள்யூ. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

| |
|---|
| |

ஆங்கிலத்தைப் பாடமொன்றாகக் கொண்ட பொது கலைத்தகைமை (வெளிவாரி) பரீட்சையில் அல்லது விஞ்ஞான இளமாணி (வெளிவாரி) பட்டப் பாடநெறியின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2015/ 2016

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ii) முழுப்பெயர் :----.

2. பால்- ஆண்/ பெண் :----.

3. (i) பதவி :----.
   (ii) தரம் :----.

4. முகவரி -
   (i) அலுவலக :----.
   (ii) சொந்த :----.

5. தொலைபேசி -
   நிலையான இல. :----.
   கையடக்க இல. :----.

6. மின்-அஞ்சல் முகவரி :----.

7. தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள இடம் -
   (i) பாடசாலை :----.
   (ii) வலயம் :----.
   (iii) மாவட்டம் :----.
   (iv) மாகாணம் :----.

8. (i) முதல் நியமனத் திகதி :----.
   (ii) நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
   (iii) சேவைக்காலம் (நியமனத் திகதியிலிருந்து விண்ணப்ப முடிவுத் திகதிவரை) :

   வருடங்கள் ........................ மாதங்கள் ........................
   நாட்கள் .........................

9. ஆசிரியராகப் பதிவுசெய்யப்பட்டுள்ள இல. :----.

10. (i) பிறந்த திகதி :

   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

   (ii) வயது (விண்ணப்பத்தின் முடிவுத் திகதி அன்று)

   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

11. **தகுதிகாண் பரீட்சையின் விபரங்கள்.**- (பல்கலைக் கழகத்தினால் வழங்கப்பட்ட பெறுபேற்றுத்தாளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்.) :

   (i) பரீட்சை :----.
   (ii) பல்கலைக்கழகம் :
   (iii) பெறுபேறு :----.

| பாடம் | தகுதி பெற்ற வருடம் | புள்ளிகள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

12. பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற பட்டப் பாடநெறியின் பெயரும் பாடங்களும் :

   (i) பட்டப் பயில்நெறியின் பெயர் :----.

   (ii) பாடங்கள் :

   (1) -----
   (2) -----
   (3) -----

13. நீர் தெரிவுசெய்யப்படின், அனுமதிக்கு எதிர்பார்க்கப்படும் பல்கலைக்கழகங்களின் பெயர்களை விருப்புரிமை ஒழுங்கில் குறிப்பிடுக :-

   (1) -----
   (2) -----
   (3) -----
   (4) -----

14. ஏதாவது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்றில், தேசிய கல்விக் கல்லூரியில், பல்கலைக்கழகத்தில் அல்லது கல்வி நிறுவனத்தில் வேறு பாடநெறியொன்றிற்கு ஏற்கனவே பதிவுசெய்துள்ளீரா ?

   "ஆம்" எனில், அதன் விபரங்கள் :
   ..........................................................................................
   ..........................................................................................

மேற்படி விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிமொழிகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

வண./திரு./திருமதி/செல்வி/ ........................................................ என்பவர் ............................................................... இலிருந்து செயற்படத்தக்கதாக ...................................................................... இல் (பாடசாலையின் பெயர்) ....................................................... ஆக (பதவி/தரம்) சேவையாற்றுவதுடன், இப்பாடசாலையில் அவரது கடைசிச் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டது. மேற்படி பட்டப் பாடநெறியைப் பின்பற்றுவதற்கு அவர் விடுவிக்கப்படலாம்/விடுவிக்கப்பட முடியாது என்பதுடன், விண்ணப்பதாரிக்கு அவசியமான கல்விக்கான விடுமுறையை நான் அங்கீகரிக்கிறேன்/அங்கீகரிக்கவில்லை (சிபாரிசு செய்யா விட்டால், தயவுசெய்து காரணங்களைக் குறிப்பிடுங்கள்) :

........................................................................................................................................................................................................

........................................................................................................................................................................................................

*சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.*

----,
அதிபர்/முகாமையாளர்,
கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்.

*முகவரி :----.*
*திகதி :----.*

*சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.*

----,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்.

*முகவரி :----.*
*திகதி :----.*

*சிபாரிசு செய்கிறேன்/செய்யவில்லை.*

----,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்.

*முகவரி :----.*
*திகதி :----.*

*6-609*

---

## திருத்தம்

**காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

*நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை கள உதவியாளர்களுக்காக நடாத்தப்படும் தேசிய தொழில் தகைமை மட்டம் 2/3/4 (NVQ Level 2/ 3/ 4) பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2016/2017 கல்வியாண்டு*

மேற்கூறிய பாடநெறிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான 2016.05.20 ஆந் திகதிய 1968 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதி 2016.06.24 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பி. எம். பி. உதயகாந்த,
நில அளவையாளர் நாயகம்.

*2016, யூன் 10.*

*6-934*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.